<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

**அசல் வழக்கு எண். 2/2019**

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய விஜயராஜன் **PW3.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 28.04.2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | விஜயராஜன் | | |
| Father Name | : | கலியபெருமாள் | Court | : |
| Village | : | கொள்ளிடம் | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 48/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் 4 ம் வாதி மற்றும் வாதி தரப்பு 3 வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

11.09.2002 தேதியிட்ட கலியபெருமாள் என்பவருக்கு நரேஷ் சந்த் ஜெயின் மற்றும் முன்னிதேவி எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.09.2006 தேதியிட்ட கலியபெருமாள் அவர்கள் சுபாஷ் சௌந்தர்ராஜன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் மதன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 20.11.1993 தேதியிட்ட கலியபெருமாளுக்கு அவரது தகப்பனார் வீரமுத்து எழுதிவைத்த உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.